# பரீட்சகரின் அறிக்கை

# AA2 பரீட்சை – 2017 யூலை

# (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறிகளும்

## பகுதி A

### வினா இல. 01

இவ்வினா 20 புள்ளிகளுக்காக 10 OTQs வினாக்களைக் கொண்டுள்ளது.

இவ்வினாவுக்கு அதிகமான பரீட்சார்த்திகள் விடையளித்திருந்தனர். இதில் அதிகளவானவர்கள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளில் அரைவாசிக்கும் அதிகமானவற்றைப் பெற்றிருந்தனர்.

பல பரீட்சார்த்திகள் வினா இல. **1.5, 1.9, 1.10** ஆகியவற்றுக்கு விடையளிக்கத் தவறியிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

சில பரீட்சார்த்திகள் வினா இல. **1.5** இல் இருந்த **"அமையாதது"** என்ற சொல்லைக் கவனிக்கத் தவறியிருந்ததன் காரணமாக அவ்வினாவுக்கு பிழையான விடைகளை வழங்கியிருந்தனர். எவ்வாறாயினும், பரீட்சார்த்திகள் பொருட்கள் விற்பனைக் சட்டத்திற்கு இணங்க உட்கிடை நிபந்தனைகள் தொடர்பில் ஆழமான அறிவினை விருத்திசெய்து கொள்ளுதல் வேண்டும்.

வினா இல. **1.9** இல், சில பரீட்சார்த்திகள் தனியார் சட்டம் மற்றும் பிராந்தியச் சட்டம் ஆகியவற்றுக் கிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் இந்த இரண்டு சட்டங்களையும் ஒன்றுடனொன்று குழப்பி எழுதியிருந்ததுடன் சிலர் இவ்விரு சட்டங்களுக்குமிடையிலான வேறுபாட்டைக் குறிப்பிடாது உதாரணங்களை மாத்திரம் எழுதியிருந்தனர்.

வினா இல. **1.10** ஒரு எளிமையானதும் நேரடியானதுமான வினாவாக இருந்தபோதிலும் பல பரீட்சார்த்திகள் இலங்கை முதலீட்டுச் சபையின் முதன்மைச் செயற்பாடுகள் இரண்டினைக் (02) கூறத் தவறியிருந்தனர்.

**பகுதி A** ஆனது சித்திப் புள்ளிகளை அடைவதற்கு மிகப் பெரியளவில் பங்களிப்புச் செய்வதால் பரீட்சார்த்திகள் **பகுதி A** இற்கு அதிகளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்காக முழுப் பாடத்திட்டத்தை முழுமையாக விளங்கிக்கொண்டிருப்பது அவசியமாகும்.

**இவ்வினா தொடர்பில் பரீட்சார்த்திகளின் ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமானது.**

## பகுதி B

### வினா இல. 02

இவ்வினா முகவராண்மைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணத்தில் மறுக்கவியலா முகவராண்மை (agency by estoppel) இனால் உருவாக்கப்பட்ட முகவர் - முதல்வர் தொடர்பொன்று இருப்பதை அடையாளம் கண்டிருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள், விவரணத்தில் தரப்பட்ட விடயங்கள் மற்றும் சரியான கோட்பாட்டு அடிப்படைகள் ஆகியவற்றின் அடிப்படையில் விடையினை பகுத்தறிவு ரீதியாக ஆராயாது **ஹேமால்** இனால் கொள்வனவு செய்யப்பட்ட காணிக்கான கொடுப்பனவைச் செய்ய A&B கம்பனிக்கு பொறுப்புள்ளது அல்லது இல்லை என விளக்கமின்றித் தெளிவற்ற விடைகளை வழங்கியிருந்தனர். ஒரு கையளவு எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் விவரணத்தில் தரப்பட்ட விடயங்கள் மற்றும் சரியான கோட்பாட்டுரீதியான அடிப்படைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட காரணங்களை முன்வைக்காது **ஹேமாலினால்** கொள்வனவு செய்யப்பட்ட நிலத்திற்கான கொடுப்பனவைச் செய்வதற்கு A&B கம்பனிக்குப் பொறுப்புள்ளது என மாத்திரம் எழுதியிருந்தமையை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. **மொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை நியாயமானளவு திருப்தியானது.**

## வினா இல. 03

இவ்வினா நடைமுறை ரீதியான விவரணம் ஒன்றை வழங்கி <u>மாற்றத்தகு சாதனங்கள்</u> மீதான அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் திருப்திகரமான பதில்களையும் வழங்கியிருந்தனர். பல பரீட்சார்த்திகள் விவரணத்தில் தரப்பட்ட காசோலை தொடர்பில் வங்கியின் பொறுப்பினை விபரிக்காது ''கைமாறத்தகாதது'' என்ற வார்த்தையுடன் குறுக்குக் கோடிட்ட காசோலை பற்றி விபரித்திருந்தனர். வினாவில் வங்கியின் பொறுப்பினைப் பற்றி விபரிக்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் வினாவை விளங்கிக்கொள்ளாது **தனபாலவு**க்கு எதிரான **தனசிறி**யின் சட்ட உரிமைகள் பற்றி விபரித்திருந்தனர்.

**மொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை நியாயமானளவு திருப்தியுடையது.**

## வினா இல. 04

இவ்வினா சர்வதேச வர்த்தகம் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு பகுதி (a) இல் சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்தப்படும் கொடுப்பனவு முறைகள் இரண்டினைக் (02) கூறுமாறும் பகுதி (b) இல், கூறப்பட்ட கொடுப்பனவு முறையில் ஒன்றைப் பற்றி விபரிக்குமாறும் கேட்கப்பட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவின் பகுதி (a) இற்கு வெற்றிகரமாக விடையளித்திருந்த போதிலும் குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் பகுதி (a) இல் குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகளில் ஒன்றைப் பற்றி விபரித்திருக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் பகுதி (b) இற்கு தேவையற்ற விபரங்களைக் கொண்ட விபரிப்புகளை வழங்கியிருந்தனர். இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட புள்ளிகளிலிருந்து வழங்கப்படக்கூடிய விடைகள் மீதான வழிகாட்டலைப் பெற்றுக்கொள்வது முக்கியமானதாகும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

## வினா இல. 05

இவ்வினா <u>காப்புறுதிச் சட்டம்</u> தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவைப் பரீட்சித்திருந்தது. காப்புறுதிச் சட்டத்துடன் தொடர்புடைய எண்ணக்கருக்களைத் தொடர்புபடுத்தி விடையினை நியாயப்படுத்துவதற்கான முறையான விடயங்களை வழங்காது, காப்புறுதிக் கம்பனியினால் **பிந்துவினுடைய** உரிமைக் கோரிக்கையை நிராகரிக்க முடியும் அல்லது முடியாது என்பதை மாத்திரம் பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்த பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாக இருந்தது. பல பரீட்சார்த்திகள் தங்களுடைய விடைகளை விபரிக்கும்போது காப்புறுதியின் பெரும்பாலான நல்லெண்ணக் (good faith) கோட்பாடுகளுடன் இந்த நேர்வினைத் தொடர்புபடுத்தியிருக்கவில்லை என்பதுடன் காப்புறுதியின் சம்பந்தமற்ற எண்ணக் கருக்களைப் பிரயோகித்துமிருந்தனர். விடை எழுதுவதற்கு முன் விடையினை சரியாக விளங்கிக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை நன்று.**

## வினா இல. 06

இவ்வினா தொழில்சார் ஒழுக்கநெறிகளின் அடிப்படைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வினாவின் பகுதி (a) இல் வேலைச் சூழலில் உருவாக்கப்படும் பாதுகாப்புகள் இரண்டினைக் (02) குறிப்பிடுமாறும் பகுதி (b) இல் தொழில், சட்டவாக்கம் மற்றும் ஒழுங்குவிதிகளால் உருவாக்கப்படும் பாதுகாப்புகள் மூன்றினைக் (03) குறிப்பிடுமாறும் கோரப்பட்டிருந்தது. சில பரீட்சார்த்திகள் இவ்விடயம் பற்றிய அறிவினைக் கொண்டிராமையும் பூரணமாக தொடர்பற்றதும் பிழையானதுமான விடைகளை வழங்கியிருந்தமையையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. வினாவில் தெளிவாக ''கூறுக'' எனக் கேட்கப்பட்டிருந்தபோதிலும் சில பரீட்சார்த்திகள் பாதுகாப்புப் பற்றி விபரமான விடைகளை வழங்கியிருந்தனர். பரீட்சார்த்திகள் விடையளிப்பதற்கு முன் வினாவில் என்ன எதிர்பார்க்கப்பட்டுள்ளது என்பது பற்றி விளங்கிக்கொள்ளுதல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமானதாக இல்லை.**

## பகுதி C

### வினா இல. 07

இது பங்குடமைச் சட்டம் தொடர்பிலான ஒரு எளிய வினாவாக இருந்தது. இங்கு ஒரு பங்காளரால் மேற்கொள்ளப்பட்ட பிழையான நடவடிக்கை ஒன்றுக்காக பங்குடமையிலுள்ள ஏனைய பங்காளர்களின் கூட்டுப் பொறுப்பு பற்றி ஆராயுமாறு கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கு நன்றாக விடையளித்திருந்ததுடன் அதிக புள்ளிகளையும் பெற்றிருந்தனர். சில பரீட்சார்த்திகள் **சுமியின்** தவறான நடவடிக்கை தொடர்பில் ABS பங்குடமையிலுள்ள ஏனைய பங்காளர்களின் பொறுப்புப் பற்றி ஆராயாது பங்குடமைச் சட்டத்துடன் தரப்பட்ட விவரணத்திலுள்ள பல்வேறு விடயங்களையும் மதிப்பீடு செய்திருந்தனர். பங்குடமை வியாபாரத்தின் ஒரு சாதாரண நிலைமையில் தீங்கு ஒன்று இழைக்கப்படும் போது அதன் பங்காளர்கள் இழப்பினை ஏற்படுத்திய நபருக்கான கூட்டுப் பொறுப்புடையவர்கள் ஆவர் என்பதையும் பாதிக்கப்பட்ட தரப்பினர் சகல பங்காளர்கள் மீதும் கூட்டாகவோ அல்லது தனித்தனியாகவோ வழக்குத் தொடுக்க முடியும் என்பதையும் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவின் செயலாற்றுகை திருப்திகரமானது.**

### வினா இல. 08

இவ்வினா 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் காப்புரிமைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும். இங்கு பகுதி (a) இல் 2003 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க புலமைச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ், காப்புரிமைச் சட்டத்தினால் பாதுகாப்பளிக்கப்படும் வேலைகளை விபரிக்குமாறும் பகுதி (b) இல் தரப்பட்ட விவரணத்தின் அடிப்படையில் காப்புரிமைச் சட்டத்தின் கீழான பொறுப்பினை விபரிக்குமாறும் கோரப்பட்டிருந்தது. பல பரீட்சார்த்திகள் காப்புரிமைச் சட்டத்தினால் பாதுகாப்பளிக்கப்படும் வேலைகளை சரியானவாறு விபரித்திருந்தனர். ஆயினும் குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் பகுதி (b) இற்கு உரியவாறு விடையளிக்கத் தவறியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட விவரணம் தொடர்பில் எழுத்தாளரின் வாழ்நாள் காலப்பகுதிக்கு மாத்திரம் காப்புரிமை பாதுகாப்பளிக்கிறது எனத் தவறாகக் குறிப்பிட்டிருந்தனர். காப்புரிமையானது எழுத்தாளரின் வாழ்நாள் காலப்பகுதி மற்றும் அவரின் இறப்பிற்குப் பின்னரான இன்னுமொரு எழுபது (70) வருட காலம் ஆகியவற்றுக்குப் பாதுகாப்பளிக்கிறது என்பதைக் கற்றுக்கொள்வது பயனுடையதாகும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றுகை நியாயமானளவு திருப்தியானது.**

### வினா இல. 09

இவ்வினா தொழிலாளர் சட்டத்தின் ஊழியர் சேமலாப நிதி (EPF) இனை அடிப்படையாகக் கொண்டதாகும். இங்கு 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்திற்கிணங்க தரப்பட்ட ஒவ்வொரு சூழ்நிலைகளின் கீழும் ஊழியர்கள் தங்களது ஊழியர் சேமலாப நிதி மீதியினைப் பெற்றுக்கொள்ள முடியுமா என்பதைக் காரணங்களுடன் விபரிக்குமாறு கோரியிருந்தது. குறிப்பிட்டளவு பரீட்சார்த்திகள் ஊழியர்கள் தமது ஊழியர் சேமலாப நிதியைப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது இல்லை என்றவாறு மாத்திரம் (காரணங்கள் கூறாது) குறிப்பிட்டிருந்தனர். இவ்வினாவின் பகுதி (c) இற்காக சில பரீட்சார்த்திகள் ஒப்பந்த அடிப்படையில் **ஆஷா** வெளிநாடு ஒன்றில் தொழில் பெற்றுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவர் ஊழியர் சேமலாப நிதி மீதியினைப் பெறுவதற்கு உரித்துடையவர் எனத் தவறாக விபரித்திருந்தனர். ஊழியர் சேமலாப நிதியை பெறுவதற்கு அவர் இலங்கைக்குத் திரும்புவதற்கான உள்நோக்கத்தைக் கொண்டிருக்கவில்லை என்ற நியாயமான தீர்மானத்திற்கு வந்திருக்க வேண்டும் என்பதைப் பரீட்சார்த்திகள் அவதானித்தல் வேண்டும்.

**மொத்தத்தில், இவ்வினாவுக்கான செயலாற்றகை திருப்திகரமானது.**

## பகுதி D

### வினா இல. 10

இவ்வினா 2 பகுதிகளை உள்ளடக்கியது. இதன் பகுதி (a) ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் பகுதி (b) பொருட்கள் விற்பனைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

இவ்வினாவின் பகுதி (a) (i) ஆனது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் உள்நாட்டு ஒப்பந்தங்களை அடிப்படையாகக் கொண்டு தரப்பட்ட விவரணம் தொடர்பில் **அமல்** தொடர்பான **அமாலியி**ன் சட்ட உரிமைகளை ஆராயுமாறு கேட்டிருந்தது. இப்பகுதிக்கு பெரும்பாலான பரீட்சார்த்திகள் நன்றாக விடையளித்திருந்தனர். எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில பரீட்சார்த்திகள் ஒப்பந்தச் சட்டத்துடன் தொடர்புபடுத்தாது வினாவில் தரப்பட்டிருந்த விடயங்களையே விடையாக வழங்கியிருந்தனர். அத்தகைய பரீட்சார்த்திகளால் தரப்பட்ட விவரணத்தில் **அமல்** தொடர்பாக **அமாலி**க்கு இருக்கின்ற சட்ட உரிமைகள் பற்றிய ஒரு முடிவினை அடைய முடியவில்லை.

வினாவின் பகுதி (a) (ii) ஆனது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் விருப்பறிவிப்பு ஒன்றுக்கான அழைப்பு ஒன்றினது அடிப்படையில் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபட்டதாக **கடைக்காரர்** தொடர்பில் **அமாலி**க்கு உள்ள சட்ட உரிமைகளைக் ஆராயுமாறு கோரியிருந்தது. சில பரீட்சார்த்திகள் அந்த விவரணத்தினை பொருட்கள் விற்பனைச் சட்டத்துடன் குழப்பியடித்திருந்ததுடன் பொருத்தமற்ற விடைகளையும் வழங்கியிருந்தனர். கடையொன்றின் கண்ணாடி வழியாக விலைச் சிட்டையுடன் பொருட்களைக் காட்சிப்படுத்தல் என்பது விருப்பறிவிப்பு ஒன்றுக்கான அழைப்பாகும். இது எதிர்காலத்தில் ஒப்பந்தம் ஒன்றினுள் நுழையும் நோக்குடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கான வெறும் கோரிக்கை ஒன்றாகும் என்பதைப் பரீட்சார்த்திகள் ஞாபகத்தில் கொள்ளுதல் வேண்டும்.

**மொத்தத்தில், இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்திகரமானது.**

வினாவின் பகுதி (b) ஆனது விவரணத்தில் தரப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு வாங்குபவர் என்ற வகையில் **சில்வாவுக்**குக் கிடைக்கக்கூடிய உரிமைகளையும் தீர்வுகளையும் ஆராயுமாறு கேட்டிருந்தது. இது பொருட்கள் விற்பனைச் சட்டத்துடன் தொடர்புபட்டதாகும். விற்பனையாளரால் உட்கிடை நிபந்தனைகள் மீறப்பட்டதன் காரணமாக வாங்குநர் என்ற வகையில் **சில்வா**வுக்குக் கிடைக்கக்கூடிய தீர்வுகளை (பரிகாரங்களை) விபரிப்பதற்குப் பல பரீட்சார்த்திகளால் முடியாமற் போயிருந்தது. பல சந்தர்ப்பங்களில் பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடயங்களைத் தந்திருந்ததுடன் வேறு பல சந்தர்ப்பங்களில் அவர்கள் வினாவில் தரப்பட்ட விடயங்களையே விடையாக மீளவும் சமர்ப்பித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள், இவ்விவரணம் ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் பரீட்சிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குழப்பியடித்திருந்தனர்.

**மொத்தத்தில், இப்பகுதிக்கான செயலாற்றுகை திருப்தியாக இல்லை.**

\- - -

## பரீட்சார்த்திகளின் தேர்ச்சி மட்டத்தினை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற்கொள்வதற்கான பொதுவான விடயங்கள்:

1. பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.
2. வினாவினைப் பல தடவைகள் வாசித்த பின் குறிப்பிட்ட மற்றும் நேரடியான விடைகள் எதிர்பார்க்கப்படுமிடத்து தேவையற்ற விபரிப்புகளை / விபரங்களை எழுத வேண்டாம்.
3. வினைச் சொல் நிரல் ஒன்று வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச்சொல்லினைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.
4. சுய கற்றல் பாடநூல், புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.
5. விடையெழுதும்போது சரியாக அடையாளம் காண்பதற்கும், அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக் கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக்கொள்ளுங்கள்.

6. கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் உரிய இடத்தில் சரியாகவும் ஏற்றவாறும் இடப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

7. வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

8. கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் உங்கள் அறிவினை மேம்படுத்திக்கொள்ளுங்கள்.

9. முறையான நேர முகாமை.

10. விடைப்பத்திரங்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலகங்கள் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சிக்கவும்.

11. முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -